ஏப்ரல்-167. **பொருளடக்கம்** 2013


1. தலையங்கம் 1-8
2. **Some Salient features of the additional affidavit in connection with the Writ Petition No. 476/2012. 9-16**
3. வேதநாயகன் விஷ்ணுவே 17-28
4. மாறன் பாப்பாவினம் 29-32
5. விவேகானந்தர் பார்வையில் மதமாற்றம் 33-49
6. ‘‘அக இலக்கியக் கோட்பாடுகளும், நாலாயிர திவ்யப்பிரபந்தமும்’’ 50-64


**பிழைதிருத்தம்**

கணிப்பொறியில் ஏற்பட்ட கோளாறு காரணமாக மாறன் பாப்பாவினம் கட்டுரையில் காணப்படும் கீழ்க்கண்ட பிழைகளை நீக்கிக் கட்டுரையை வாசித்திட வேண்டுகிறோம்.

1.பக்கம் 30. முதல்வரி-பிழை -‘வென்தனை’, திருத்தம்- ‘வெண்தளை’.

2.பக்கம் 30. வரி 24-பிழை -‘எனறால்’, திருத்தம் - ‘என்றால்’.

3. இந்த வரியில் விடுபட்டது. ‘என்றால்’ என்னும் சொல்லிற்குப் பிறகு, ‘கோடித்தேரி னொடு மறைந்தான். வேடுவரோ’ என்ற சொற்றொடரினைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

4.பக்கம் 31. வரி 9 - பிழை - ‘ஓவரது’, திருத்தம் - ‘ஓவாது’.

5.பக்கம் 31. வரி 12 - பிழை - ‘வளமகெழு’ - திருத்தம் ‘வளம்கெழு’

6.பக்கம் 31. வரி 22 - பிழை - ‘வறி’ - திருத்தம் - கூறி.

7.பக்கம் 31 - வரி 23 - பிழை - ‘புவமை’ - திருத்தம் - ‘உவமை’.


Editor : SriVaishnavaSri **A.KRISHNAMACHARI,**
Printed at: *Sri Ranganachiyar Achagam, 214, East Uthara St., Srirangam, Trichy-6. 98842 89887. www.srivaishnavasri.com*


ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத் வரவர முநயே நம:

**‘‘குருகூர் நம்பி ஆரண குருகுலம்’’**

**கிஞ்சித்காரம் டிரஸ்ட், 106, தெற்குரதவீதி, ஆழ்வார்திருநகரி - 628 612 - தூத்துக்குடி மாவட்டம்.**

**ஸ்வாமி நம்மாழ்வாரின் அவதாரஸ்தலமான ஆழ்வார் திருநகரியில் வேதம் மற்றும் திவ்யப்பிரபந்த வித்வான்களை உருவாக்கும் நோக்கத்துடன் மேற்கண்ட பாடசாலை விஜய வருடம் வைகாசி விசாக ஆழ்வார் உத்ஸவத்தின் போது (May 19th. 2013) தொடங்கப்படவுள்ளது. சிறந்த வேத மற்றும் திவ்யப்பிரபந்த, பண்டிதர்களைக் கொண்டு கீழ்க்கண்ட பாடத் திட்டங்கள் நடத்தப்படும்.**

**யஸுர்வேத அத்யயனம் - 8 ஆண்டுகள்**
**நாலாயிர திவ்யப்பிரபந்த அத்யயனம் - 5 ஆண்டுகள்**
**(இரண்டையும் ஒரே நேரத்தில் சேர்த்தும் வாசிக்கலாம்.)**

**இவற்றுடன், எட்டாம் வகுப்பு மற்றும் பத்தாம் வகுப்புத் தேர்வுகளுக்கான கல்வியும் புகட்டப்படும்.**

**வயது - 7 வயதுக்கு மேல் 12 வயதுக்குள். தகுதி - உபநயனம் ஆகி இருக்க வேண்டும்; வேத/திவ்யப்பிரபந்த ஸம்ரக்ஷணத்தில் விருப்பமும், நம் பிறவியின் பயனை அடைவ தற்காக ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயப் பணியில் ஈடுபாடும் உடையோர் சேரலாம்.**

**வேறுசெய்திகள்: எந்தக் கட்டணமும் இல்லை. ஸம்ஸ்க்ருத மொழியில் முன்னறிவு இல்லாதாரும் சேரலாம். அத்யயனம் முடிந்த பின் குடும்பத்துக்குத் தேவையான வருமானத்துடன் கூடிய ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயப்பணிக்கு ஏற்பாடு செய்யப்படும். நான்கு ஆண்டுகளாக ஸ்ரீரங்கம் பாடசாலை 30 மாணவர்களுடன் சிறப்பாக நடந்து வருகிறது.**

**திருக்குருகூர் திவ்யக்ஷேத்ரத்தில் தாம்ரபர்ணி நதியில் நீராடி, ஸ்வாமி நம்மாழ்வார் மற்றும் ஆதிநாதப்பெருமாள் அருளோடு இரு வேதங்களையும் அத்யயனம் செய்வதே சிறந்த தொண்டாகும். இதில் விருப்பமுள்ளோரை வரவேற்கிறோம். உடன் தொடர்பு கொள்க. 98408 45410/ 90947 88135. சென்னை மையம் - 044- 24992728. இன்னணம்: வேளுக்குடி க்ருஷ்ணன்.**

ஸ்ரீ:

## ஸ்ரீபெரும்பூதூரில் 10.5.2013 அன்று 'வேதார்த்தஸங்க்ரஹம்' மற்றும் 'வேதாந்த தீபம்' ஆகிய நூல்கள் வெளியீட்டுவிழா.

எம்பெருமானாரின் ஆயிரமாவது ஆண்டு கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, எம்பெருமானார் அருளிச்செய்த 1. வேதார்த்த ஸங்க்ரஹம், 2. வேதாந்த ஸாரம், 3. வேதாந்த தீபம், 4. ஸ்ரீபாஷ்யம், 5. கீதா பாஷ்யம், 6. நித்யம், 7. சரணாகதி கத்யம், 8. ஸ்ரீரங்க கத்யம், 9. ஸ்ரீவைகுண்டகத்யம் ஆகிய நூல்களின் எளிய தமிழ்நடை விவரணம் வெளியிடப்பட வேண்டும், அனைத்துத்தரப்பு மக்களும் ஓரளவிற் கேனும் எம்பெருமானார் அருளிச்செய்த நூல்களின் உட்பொருள் யாது? விசிஷ்டாத்வைத தத்துவத்தை எம்பெருமானார் தமது நூல்கள் வழி எவ்வாறு வெளிப்படுத்தி உள்ளார் என்பதை அறிந்துகொள்ள வேண்டும் என்ற அவாவினால் சென்ற நந்தன ஆண்டு 'இராமானுசர் ஆயிரம்' என்ற தலைப்பில் மூன்று பாகங்கள் வெளியிடப்பட்டன. வேதாந்தஸாரத்தின் எளிய நடை விவரணம் சென்ற ஆண்டு வெளியிடப்பட்டது. ஸம்ஸ்க்ருத மொழி அறிவு 95 விழுக்காடு அற்றுப்போன இந்தக் காலகட்டத்தில் எளிய தமிழ்நடை விவரணத்துடனும், மணிப்ரவாள மற்றும் ஸம்ஸ்க்ருத சொற்றொடர்களுக்கு உரிய தமிழ்ச் சொற்றொடர் களுடன், திருவாய்மொழிப் பாசுரங்களின் உதவிகொண்டு வேத வேதாந்த கருத்துக்களை எம்பெருமானார் எவ்வாறு நிலைநாட்டி யிருக்கக் கூடும் என்பதைத் தெளிவுபடுத்துவதற்காக நாற்பதுக்கும் மேற்பட்ட திருவாய்மொழிப் பாசுரங்களின் விளக்கவுரை பல இடங்களில் கொடுக்கப்பட்டு உள்ளன. வேதார்த்தஸங்க்ரஹம் மற்றும் வேதாந்த தீபம் ஆகிய இரண்டு நூல்களும் விஜய ஆண்டு சித்திரை 27ஆம் நாள் - (எம்பெருமானார் உத்ஸவம் 6ஆம் திருநாள்) 10.5.2013 வெள்ளிக் கிழமையன்று மாலை 5 மணியளவில் எம்பார் ஜீயர் மடத்தில் கற்றறிந்தோர் பலர் முன்னிலையில் வெளியீடு செய்யப்படவுள்ளன. சுமார் 1200 பக்கங்கள் (D.1/8.) கொண்ட வேதார்த்த ஸங்க்ரஹம் இருபகுதிகளாகவும், வேதாந்த தீபம் (600 பக்கங்கள் கொண்டது) முதற்பகுதியும் (முதல் இரண்டு அத்யாயங்களுக்கான விளக்கவுரை.) அன்றைய தினம் ஸ்ரீமத்பரமஹம் ஸேத்யாதி எம்பார்ஜீயர் ஸ்வாமி திருக்கரங்களால் வெளியிடப்படவுள்ளன. வெளியீட்டு நாள் சலுகையாக ரூ. 800 விலை நிர்ணயிக்கப்பட்ட இந்த மூன்று பகுதிகளும் அன்றைய தினம் ரூ. 650க்கு விற்பனை செய்யப்பட உள்ளன. 'வேதார்த்த ஸங்க்ரஹம் நூலோடு' கேள்வித்தாள் ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. 2013 செப்டம்பர் மாத இறுதிக்குள் அந்தக் கேள்விகளுக்குப் பதிலளிப்போர்க்கு ரூ. 5000 முதற்பரிசாகவும், ரூ. 3000 இரண்டாம் பரிசாகவும், ரூ. 2000 மூன்றாம் பரிசாகவும் அளிக்கப்பட உள்ளன. அனைத்து இராமானுசன் அடியார்களும் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு எம்பெருமானார் திருவருளைப் பெற்று உய்ந்திட வேண்டுகிறோம். ✱✱✱

Registration No.TNTAM/2000/5374, Registered as a Newspaper
Registered Newspaper - Posted at Srirangam H.P.O.

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமத் வரவர முநயே நம:

# பாஞ்சஜன்யம்

இதழ் எண். 167 ஏப்ரல் - 2013

இலக்கியம், வரலாறு, கல்வெட்டுகள், ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தக் கோட்பாடுகள், மற்றும் மரபு மீறல்களைக் கண்டித்து எழுதப்படும் கட்டுரை களைக் கொண்ட ஒரு புரட்சிகர பல்சுவை மாத இதழ்.

ஆசிரியர்:ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ.கிருஷ்ணமாசார்யர்.

தனிப் பிரதி ரூ. 20/-

ஆண்டு சந்தா ரூ. 200/-

கிடைக்குமிடம்: ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ,
214, கீழை உத்தரவீதி, திருவரங்கம், திருச்சி-6.
☎: 0431-2434398. www.srivaishnavasri.com